| | |
|---|---|
| அனுப்புநர்<br>முனைவர்.க.அறிவொளி,<br>இயக்குநர்,<br>பள்ளிக் கல்வி இயக்ககம்,<br>பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,<br>சென்னை –6. | பெறுநர்<br>அனைத்து மாவட்ட முதன்மைக்<br>கல்வி அலுவலர்கள். |

ந.க.எண்.46500/ ஐ/2023 நாள் 14.07.2023

அம்மையீர்/அய்யா,

பொருள் : பள்ளிக் கல்வி - டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது– 2023–2024 ஆம் கல்வியாண்டிற்கு ஆசிரியர்களை தேர்வு செய்வதற்கான நடைமுறைகள் மற்றும் நெறிமுறைகள் ஆணை வெளியிட வேண்டுதல் கருத்துரு பணிந்து அனுப்புதல் – சார்பு.

பார்வை : அரசாணை(1டி) எண்.220 பள்ளிக் கல்வி (பொது–II) துறை, நாள் 05.08.2022

------

மாநில அரசின் பள்ளிக் கல்வி துறையின் கீழ் இயங்கும் தொடக்க/நடுநிலை/உயர்நிலை/மேல்நிலை/தனியார் பள்ளிகள்/ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள்/சமூக பாதுகாப்புத்துறை/ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் 5–ம் தேதி முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் பிறந்த நாளினை ஆசிரியர் தின விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவில் சிறந்த ஆசிரியர்களுக்கு மாநில அரசு விருதான டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டு வருகிறது. விருது பெறும் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தின விழாவில் ரூ. 10,000(ரூபாய் பத்தாயிரம் மட்டும்)ரொக்கப் பரிசும், ரூ.2,500 மதிப்பிலான வெள்ளிப் பதக்கமும், பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பயணப்படியும் வழங்கப்பட்டு வருகிறது.

பார்வையில் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது பெற ஆசிரியர்களை தேர்வு செய்வதற்கான நடைமுறைகள் குறித்து அரசாணை வெளிடப்பட்டுள்ளது. அரசாணையில் தற்போது பின்வரும் எண்ணிக்கை அடிப்படையில் 38 வருவாய் மாவட்டத்திற்கு கீழ்கண்டவாறு விருதுகள் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது | | | | |
|---|---|---|---|---|
| வ. எண் | மாவட்டம் | தொடக்க/ நடுநிலை | உயர்நிலை/ மேல்நிலை | மொத்தம் |
| 1 | சென்னை | 6 | 6 | 12 |
| 2 | திருவள்ளூர் | 6 | 6 | 12 |
| 3 | காஞ்சிபுரம் | 4 | 4 | 8 |
| 4 | செங்கல்பட்டு | 4 | 4 | 8 |
| 5 | வேலூர் | 4 | 4 | 8 |
| 6 | இராணிப்பேட்டை | 4 | 4 | 8 |
| 7 | திருப்பத்தூர் | 4 | 4 | 8 |
| 8 | திருவண்ணாமலை | 6 | 6 | 12 |
| 9 | விழுப்புரம் | 4 | 4 | 8 |
| 10 | கள்ளக்குறிச்சி | 4 | 4 | 8 |
| 11 | கடலூர் | 5 | 5 | 10 |
| 12 | நாகப்பட்டினம் | 3 | 3 | 6 |
| 13 | திருவாரூர் | 4 | 4 | 8 |
| 14 | தஞ்சாவூர் | 5 | 5 | 10 |
| 15 | பெரம்பலூர் | 3 | 3 | 6 |
| 16 | அரியலூர் | 3 | 3 | 6 |
| 17 | திருச்சிராப்பள்ளி | 6 | 6 | 12 |
| 18 | கரூர் | 3 | 3 | 6 |
| 19 | புதுக்கோட்டை | 5 | 5 | 10 |
| 20 | சிவகங்கை | 4 | 4 | 8 |
| 21 | இராமநாதபுரம் | 5 | 5 | 10 |
| 22 | திண்டுக்கல் | 5 | 5 | 10 |
| 23 | மதுரை | 6 | 6 | 12 |
| 24 | தேனி | 4 | 4 | 8 |
| 25 | சேலம் | 6 | 6 | 12 |
| 26 | நாமக்கல் | 4 | 4 | 8 |
| 27 | தருமபுரி | 4 | 4 | 8 |
| 28 | கிருஷ்ணகிரி | 4 | 4 | 8 |
| 29 | ஈரோடு | 5 | 5 | 10 |
| 30 | கோயம்புத்தூர் | 6 | 6 | 12 |
| 31 | திருப்பூர் | 5 | 5 | 10 |

| | | | | |
|---|---|---|---|---|
| 32 | நீலகிரி | 4 | 4 | 8 |
| 33 | விருதுநகர் | 5 | 5 | 10 |
| 34 | தூத்துக்குடி | 5 | 5 | 10 |
| 35 | திருநெல்வேலி | 4 | 4 | 8 |
| 36 | தென்காசி | 4 | 4 | 8 |
| 37 | கன்னியாகுமரி | 5 | 5 | 10 |
| 38 | மயிலாடுதுறை | 3 | 3 | 6 |
| | மொத்தம் | 171 | 171 | 342 |
| | | | மெட்ரிக் பள்ளிகள்(மாவட்டத்திற்கு 1 ஆசிரியர்) | 38 |
| | | | ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் | 2 |
| | | | சமூகப் பாதுகாப்புத் துறை பள்ளிகள் | 2 |
| | | | மாற்றுத் திறனாளி ஆசிரியர்கள் | 2 |
| | | | மொத்தம் | 386 |

இந்நிலையில் தற்போது சென்ற ஆண்டுகளை போலவே 38 வருவாய் மாவட்டங்கள் உள்ளதால் 2023-24 ஆம் கல்வியாண்டிற்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதுகள் எண்ணிக்கையை 386 ஆக நிர்ணயம் செய்திடவும், பார்வையில் காணும் அரசாணையில் ஆணையிடப்பட்ட கீழ்காண் மாநில தேர்வுக்குழு மற்றும் மாவட்ட தேர்வுக் குழு தொடர்ந்து செயல்படவும் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள செயல்முறைகளுக்கேற்ப பணிகளை மேற்கொள்ளவும் தெரிவிக்கப்படுகிறது.

ii) மாவட்டத்தேர்வுக்குழு

| வஎண் | பதவி | குழுவில் பதவி |
|---|---|---|
| 1 | முதன்மைக் கல்வி அலுவலர் | தலைவர் |
| 2 | முதல்வர், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் | உறுப்பினர் |
| 3 | மாவட்டக் கல்வி அலுவலர்கள்(அனைத்து வகை) | உறுப்பினர் |
| 4 | முதுநிலை வட்டாரக் கல்வி அலுவலர் | உறுப்பினர் |
| 5 | மேல்நிலைப் பள்ளி முதுநிலை தலைமையாசிரியர் | உறுப்பினர் |
| 6 | உயர்நிலைப் பள்ளி முதுநிலை தலைமையாசிரியர் | உறுப்பினர் |

மேலும், விருது வழங்கிடஆசிரியர்களைத் தேர்வு செய்திட கீழ்க்காண் நடைமுறைகள் மற்றும் நெறிமுறைகளைப் பின்பற்றலாம்.

1. ஜூலை மாதம் விருதிற்குத் தகுதியுள்ள ஆசிரியர்கள் உரிய படிவத்தில் விண்ணப்பிக்கக் கோரப்படுதல் வேண்டும்.

2. போதிய ஆசிரியர்கள் விண்ணப்பிக்கவில்லை என்று தெரிவிக்காமல், ஆய்வு அலுவலர்கள் தங்கள் பள்ளிகள் பார்வையின் போது கண்டறிந்த சிறந்த ஆசிரியர்களை மாவட்டத் தேர்வுக் குழுவின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

3. முதன்மைக் கல்வி அலுவலர் தலைமையிலான குழு விண்ணப்பித்த அனைத்து ஆசிரியர்கள் பணிபுரியும் பள்ளிகளுக்குச் சென்று அவர்களுடைய செயல்பாடுகளைக் கண்டறிந்து மதிப்பீடு செய்ய வேண்டும்.

4. விண்ணப்பித்த ஆசிரியர்கள் பணிப்பதிவேடுகள் மற்றும் பிற சான்றுகள் மாவட்ட அளவில் உரிய அலுவலர்களால் சரிபார்க்கப்பட வேண்டும்.

5. விண்ணப்பித்த மற்றும் பள்ளிப் பார்வையின்போது ஆய்வு அலுவலர்களால் கண்டறிந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் மாவட்டத் தேர்வுக்குழுவின் முன் நேர்காணலுக்கு வரவழைக்கப்பட்டு, மதிப்பீடு செய்தல் வேண்டும்.

6. மாவட்டத்தேர்வுக்குழுவினர் தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்களின் பட்டியல் / கருத்துருக்களை மாநிலத் தேர்வுக்குழுவின் பரிசீலனைக்கு ஆகஸ்டு மாதம் 14ஆம் தேதிக்குள் பரிந்துரை செய்யப்பட வேண்டும்.

7. மாநிலத் தேர்வுக்குழு மாவட்டக்குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில் இறுதிப் பட்டியலைத் தயாரிக்க வேண்டும்.

## வழிகாட்டு நெறிமுறைகள் (GUIDELINES)

1. அனைத்து வகை ஆசிரியர்களும் குறைந்தபட்சம் 5 வருடங்கள் பணிபுரிந்திருக்க வேண்டும்.

2. மாநில பாட திட்டத்தின் கீழ் செயல்படும் அரசுப் பள்ளிகள் / ஆதிதிராவிட / பழங்குடியினர் நலத்துறை / பிற்பட்டோர் நலத்துறை / சமூக பாதுகாப்புத் துறை / நிதி உதவி பெறும் பள்ளிகள் / ஆங்கிலோ இந்திய பள்ளிகள் மற்றும் அயநிதி / மெட்ரிக் பள்ளிகள் ஆகிய மேலாண்மைகளின் கீழ் செயல்படும் தொடக்க / நடுநிலை / உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்துவகை ஆசிரியர்களும் விருதிற்குத் தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

3. இவ்விருது வகுப்பறையில் ஆசிரியர்களுக்கு மட்டுமே கற்பித்தல் ஈடுபடும் வழங்கப்படும். அலுவலகங்களில் பணியில் நிர்வாகப்பணி மேற்கொள்ளும் ஆசிரியர்கள் விண்ணப்பிக்கக்கூடாது.

4. கல்வியாண்டில் செப்டம்பர் 30ஆம் தேதிக்கு முன் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற ஆசிரியர்களைப் பரிந்துரை செய்யக்கூடாது. ஆசிரியர்கள் கல்வியாண்டில் குறைந்தது 4 மாதங்கள் (செப்டம்பர் 30ஆம் தேதிவரை –in Regular Service) பணிபுரிந்தவராக இருத்தல் வேண்டும். (மறுநியமன காலத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளக்கூடாது).

5. பரிந்துரைக்கப்படும் ஆசிரியர்கள் எவ்விதக் குற்றச்சாட்டிற்கும், ஒழுங்கு நடவடிக்கைக்கும் உட்படாதவராகவும், பொதுவாழ்வில் தூய்மையானவராகவும், பொது சேவைகளில் நாட்டம் கொண்டவராகவும், பள்ளி மாணவர்களின் இடைநிற்றலைக் குறைத்தல், பள்ளி மாணவர் சேர்க்கை, தேர்வில் தேர்ச்சி சதவீதத்தை உயர்த்துதல், கல்வித்தரத்தில் பின்தங்கிய மாணவர்களின் தரத்தை முன்னேற்ற பாடுபடுபவராகவும் இருத்தல் வேண்டும்.

6. அரசியலில் பங்கு பெற்று அரசியல் கட்சிகளுடன் தொடர்புடைய ஆசிரியர்களின் பெயர்கள் கண்டிப்பாகப் பரிந்துரைக்கப்படக் கூடாது.

7. கல்வியினை வணிகரீதியாகக் கருதி செயல்படும் ஆசிரியர்களையும், நடத்தை விதிகளுக்கு முரணாக இருக்கும் ஆசிரியர்களையும் இவ்விருதிற்குத் தகுதியற்றவர்களாகக் கருத்தப்பட வேண்டும்.

8. சிறந்த முறையில் பணிபுரியும் தமிழாசிரியர்கள் மற்றும் சிறப்பு ஆசிரியர்களான ஓவிய ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், கைத்தொழில் ஆசிரியர்கள், இசை ஆசிரியர்கள் மற்றும் மாற்றுத் திறன் ஆசிரியர்களில் தகுதியானவர்களையும் விருதிற்குப் பரிந்துரைக்கும் போது கவனத்தில் கொள்ளவேண்டும்.

9. பரிந்துரைக்கப்படும் ஆசிரியர்களின் கருத்துருக்கள், பெயர்பட்டியலினை மாவட்டத் தேர்வுக்குழுத் தலைவர் தமது சொந்தப் பொறுப்பில் வைத்துக் கொள்ள வேண்டும். தேர்வுக்குழு உறுப்பினர்களும் இது தொடர்பாக மந்தணம் காத்திடல் வேண்டும்.

10. டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதிற்காக வரையரை செய்யப்பட்ட படிவத்தில் மட்டுமே ஆசிரியர்களின் கருத்துருக்கள் அனுப்பப்படல் வேண்டும்.

11. ஆகஸ்டு மாதம் 14ஆம் தேதிக்குள் முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட விருதுகளின் எண்ணிக்கை அடிப்படையில் பட்டியல் தயார் செய்து 1:2என்ற வீதத்தில் தேர்வு செய்து, நல்லாசிரியர் விருதிற்கான ஆசிரியர்களின் கருத்துருக்களை சாதாரண புத்தக வடிவில் தயாரித்து ஒரு நகல் மட்டும் பரளிக் கல்வி இணை இயக்குநர் (இடைநிலைக்கல்வி) அவர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

12. வருவாய் மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்களைத் தேர்வு செய்து பரிந்துரை செய்யப்படும் பொழுது, அனைத்து வகை ஆசிரியர்கள் மற்றும் அனைத்துப் பள்ளிகளையும் உள்ளடக்கியதாக உள்ளதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

13. மாநில அரசால் பரிந்துரைக்கப்பட்டு தேசிய விருது பெற்ற எந்த ஆசிரியரையும் பரிந்துரை செய்தல் கூடாது.

இத்துடன் மாதிரி விண்ணப்பப்படிவம் பார்வையில் காண் அரசாணை இணைத்து உரிய நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது என அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

பள்ளிக் கல்வி இயக்குநருக்காக

இணைப்பு: விருது விண்ணப்படிவம் மற்றும் அரசாணை.

17.7.2023

## சுருக்கம்

பள்ளிக் கல்வி – டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது – 2021-22 ஆம் கல்வியாண்டிற்கு ஆசிரியர்களைத் தேர்வு செய்வதற்கான நடைமுறைகள் மற்றும் நெறிமுறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## பள்ளிக் கல்வி(பொது-II)த் துறை

**அரசாணை (1டி) எண். 220** **நாள்:05.08.2022.**

திருவள்ளுவராண்டு 2053,
சுபகிருது வருடம்- ஆடி 20.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (1டி) எண்.122, பள்ளிக் கல்வித்(பொது-II)த்துறைநாள். 03.08.2021.
2. பள்ளிக் கல்வி ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.46500/ஐ/2022, நாள்11.07.2022.

-----------------

**ஆணை**:-

டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது பெற ஆசிரியர்களைத் தேர்வு செய்ய, 2020-2021-ஆம் கல்வியாண்டு முதல் சில நடைமுறை மாற்றங்களை மேற்கொண்டு பள்ளிக்கல்வி ஆணையரின் தலைமையில் 11 உறுப்பினர்களை கொண்ட மாநிலத் தேர்வுக்குழு அமைத்து, அதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது.

2. தற்போது புதியதாக நாகப்பட்டினம் மாவட்டத்திலிருந்து பிரித்து மயிலாடுதுறை வருவாய் மாவட்டம் அமைக்கப்பட்டுள்ளதால் 2021-22ஆம் கல்வியாண்டு முதல் மயிலாடுதுறை மாவட்டத்தில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் விருதுகள் வழங்கிட, திருத்திய எண்ணிக்கையின் அடிப்படையில், 38 வருவாய் மாவட்டத்திற்கு விருதுகள் வழங்கிட அரசாணை வழங்குமாறும், தற்போது பள்ளிக் கல்வித் துறையில் 38 வருவாய் மாவட்டங்களாக நிர்வாகம் பிரிக்கப்பட்டுள்ளதாலும், 2021-2022 ஆம் கல்வியாண்டு முதல் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதுகளின் எண்ணிக்கையை 386 ஆக நிர்ணயம் செய்திடவும், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்ட மாநிலத் தேர்வுக்குழு மற்றும் மாவட்டத் தேர்வுக்குழு தொடர்ந்து செயல்படவும் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளில் மாற்றம் செய்தும் அரசாணை வழங்கிடுமாறும் பள்ளிக் கல்வி ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துருவை கவனமுடன் ஆய்வு செய்த அரசு, அதனை ஏற்று 2021-2022 ஆம் கல்வியாண்டு முதல் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது வழங்கிட தகுதியான ஆசிரியர்களை தேர்வு செய்வதற்கு மாவட்ட வாரி, பள்ளிகள் வாரி வரையறை செய்யப்பட்டுள்ள விருதுகளின் எண்ணிக்கை மற்றும் மாவட்ட தேர்வுக் குழுக்கள், மாநில தேர்வுக் குழு அமைப்பதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் ஆகியவை சார்பாக கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:

(அ) வருவாய் மாவட்டங்களில் உள்ள மாநில அரசின் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் தொடக்க/ நடுநிலை/ உயர்நிலை/ மேல்நிலை/ மெட்ரிகுலேசன்/ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள், சமூக பாதுகாப்புத் துறை, ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் நலத்துறை மற்றும் பிற்பட்டோர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பணிபுரியும் சிறந்த ஆசிரியர்களைத் தேர்வு செய்து கீழ்க்கண்டவாறு மொத்தம் 386 ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கிட வேண்டும்:

| டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது | | | | |
|---|---|---|---|---|
| வ.எண் | மாவட்டம் | விருதுகள் எண்ணிக்கை | | |
| | | தொடக்க/ நடுநிலை | உயர்நிலை/ மேல்நிலை | மொத்தம் |
| 1 | சென்னை | 6 | 6 | 12 |
| 2 | திருவள்ளூர் | 6 | 6 | 12 |
| 3 | காஞ்சிபுரம் | 4 | 4 | 8 |
| 4 | செங்கல்பட்டு | 4 | 4 | 8 |
| 5 | வேலூர் | 4 | 4 | 8 |
| 6 | இராணிப்பேட்டை | 4 | 4 | 8 |
| 7 | திருப்பத்தூர் | 4 | 4 | 8 |
| 8 | திருவண்ணாமலை | 6 | 6 | 12 |
| 9 | விழுப்புரம் | 4 | 4 | 8 |
| 10 | கள்ளக்குறிச்சி | 4 | 4 | 8 |
| 11 | கடலூர் | 5 | 5 | 10 |
| 12 | நாகப்பட்டினம் | 3 | 3 | 6 |
| 13 | திருவாரூர் | 4 | 4 | 8 |
| 14 | தஞ்சாவூர் | 5 | 5 | 10 |
| 15 | பெரம்பலூர் | 3 | 3 | 6 |
| 16 | அரியலூர் | 3 | 3 | 6 |
| 17 | திருச்சிராப்பள்ளி | 6 | 6 | 12 |
| 18 | கரூர் | 3 | 3 | 6 |
| 19 | புதுக்கோட்டை | 5 | 5 | 10 |
| 20 | சிவகங்கை | 4 | 4 | 8 |
| 21 | இராமநாதபுரம் | 5 | 5 | 10 |
| 22 | திண்டுக்கல் | 5 | 5 | 10 |
| 23 | மதுரை | 6 | 6 | 12 |
| 24 | தேனி | 4 | 4 | 8 |
| 25 | சேலம் | 6 | 6 | 12 |
| 26 | நாமக்கல் | 4 | 4 | 8 |

| | | | | |
|---|---|---|---|---|
| 27 | தருமபுரி | 4 | 4 | 8 |
| 28 | கிருஷ்ணகிரி | 4 | 4 | 8 |
| 29 | ஈரோடு | 5 | 5 | 10 |
| 30 | கோயம்புத்தூர் | 6 | 6 | 12 |
| 31 | திருப்பூர் | 5 | 5 | 10 |
| 32 | நீலகிரி | 4 | 4 | 8 |
| 33 | விருதுநகர் | 5 | 5 | 10 |
| 34 | தூத்துக்குடி | 5 | 5 | 10 |
| 35 | திருநெல்வேலி | 4 | 4 | 8 |
| 36 | தென்காசி | 4 | 4 | 8 |
| 37 | கன்னியாகுமரி | 5 | 5 | 10 |
| 38 | மயிலாடுதுறை | 3 | 3 | 6 |
| | மொத்தம் | 171 | 171 | 342 |
| | மெட்ரிக் பள்ளிகள் (மாவட்டத்திற்கு 1 ஆசிரியர்) | | | 38 |
| | ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் | | | 2 |
| | சமூகப் பாதுகாப்புத் துறை பள்ளிகள் | | | 2 |
| | மாற்றுத்திறனாளி ஆசிரியர்கள் | | | 2 |
| | மொத்தம் | | | 386 |

(ஆ) மேற்கண்டவாறு திருத்தப்பட்ட எண்ணிக்கையின் அடிப்படையில் 38 வருவாய் மாவட்ட அளவில் ஆசிரியர்களைத் தேர்வு செய்திடக் கீழ்க்கண்டவாறு மாவட்டத் தேர்வுக்குழு அமைக்கப்படவேண்டும்.

| | | |
|---|---|---|
| 1 | முதன்மைக் கல்வி அலுவலர் | தலைவர் |
| 2 | முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் | உறுப்பினர் |
| 3 | மாவட்டக் கல்வி அலுவலர்கள் | உறுப்பினர் |
| 4 | முதுநிலை வட்டாரக் கல்வி அலுவலர் | உறுப்பினர் |
| 5 | மேல்நிலைப் பள்ளி முதுநிலை தலைமையாசிரியர் | உறுப்பினர் |

(இ) மாவட்டத் தேர்வுக் குழுவினரால் பரிந்துரை செய்து பெறப்படும் ஆசிரியர்கள் பட்டியலிலிருந்துபரிசீலனை செய்து தேர்வு செய்திட பள்ளிக் கல்வி ஆணையரை தலைவராகக் கொண்ட மாநில தேர்வுக்குழு கீழ்க்கண்டவாறு அமைக்கப்படுகிறது:-

| | | |
|---|---|---|
| 1 | பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை-6 | தலைவர் |
| 2 | இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை-6 | உறுப்பினர் |
| 3 | தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6 | உறுப்பினர் |
| 4 | அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை-6 | உறுப்பினர் |
| 5 | மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்குநர், சென்னை-6 | உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 6 | இயக்குநர், ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை, சென்னை-8 (அல்லது) அன்னாரின் பிரதிநிதி | உறுப்பினர் |
| 7 | சென்னை மாநகராட்சி ஆணையாளர், சென்னை-8 (அல்லது) அன்னாரின் பிரதிநிதி | உறுப்பினர் |
| 8 | முதல்வர், கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம், சைதாப்பேட்டை, சென்னை-15 | உறுப்பினர் |
| 9 | சிறப்பு ஆணையர் (ம) இயக்குநர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலம், சென்னை-5 (அல்லது) அன்னாரின் பிரதிநிதி | உறுப்பினர் |
| 10 | இயக்குநர், சமூகபாதுகாப்புத்துறை, சென்னை-10 (அல்லது) அன்னாரின் பிரதிநிதி | உறுப்பினர் |
| 11 | பள்ளிக் கல்வி இணைஇயக்குநர் (இடைநிலை), சென்னை-6 | உறுப்பினர் - செயலர் |

(ஈ) விருது வழங்கிட ஆசிரியர்களைத் தேர்வு செய்திட பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் நெறிமுறைகள்:-

1. ஜூலை மாதம் விருதிற்குத் தகுதியுள்ள ஆசிரியர்கள் உரிய படிவத்தில் விண்ணப்பிக்கக் கோரப்படுதல் வேண்டும்.
2. போதிய ஆசிரியர்கள் விண்ணப்பிக்கவில்லை என்று தெரிவிக்காமல், ஆய்வு அலுவலர்கள் தங்கள் பள்ளிகள் பார்வையின் போது கண்டறிந்த சிறந்த ஆசிரியர்களை மாவட்டத் தேர்வுக் குழுவின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.
3. முதன்மைக் கல்வி அலுவலர் தலைமையிலான குழு விண்ணப்பித்த அனைத்து ஆசிரியர்கள் பணிபுரியும் பள்ளிகளுக்குச் சென்று அவர்களுடைய செயல்பாடுகளைக் கண்டறிந்து மதிப்பீடு செய்ய வேண்டும்.
4. விண்ணப்பித்த ஆசிரியர்கள் பணிப்பதிவேடுகள் மற்றும் பிற சான்றுகள் மாவட்ட அளவில் உரிய அலுவலர்களால் சரிபார்க்கப்பட வேண்டும்.
5. விண்ணப்பித்த மற்றும் பள்ளிப் பார்வையின்போது ஆய்வு அலுவலர்களால் கண்டறிந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் மாவட்டத் தேர்வுக்குழுவின் முன் நேர்காணலுக்கு வரவழைக்கப்பட்டு, மதிப்பீடு செய்தல் வேண்டும்.
6. மாவட்டத் தேர்வுக்குழுவினர் தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்களின் பட்டியல் / கருத்துருக்களை மாநிலத் தேர்வுக்குழுவின் பரிசீலனைக்கு ஆகஸ்டு மாதம் 14ஆம் தேதிக்குள் பரிந்துரை செய்யப்பட வேண்டும்.
7. மாநிலத் தேர்வுக்குழு மாவட்டக்குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில் இறுதிப் பட்டியலைத் தயாரிக்க வேண்டும்.

## வழிகாட்டு நெறிமுறைகள் (GUIDELINES)

1. அனைத்துவகைஆசிரியர்களும் குறைந்தபட்சம் 5 வருடங்கள் பணிபுரிந்திருக்க வேண்டும்.
2. மாநில பாடதிட்டத்தின் கீழ் செயல்படும் அரசுப் பள்ளிகள்/ ஆதிதிராவிட / பழங்குடியினர் நலத்துறை / பிற்பட்டோர் நலத்துறை/ சமூக பாதுகாப்புத் துறை /நிதி உதவி பெறும் பள்ளிகள் / ஆங்கிலோ இந்திய பள்ளிகள் மற்றும் சுயநிதி / மெட்ரிக் பள்ளிகள் ஆகிய மேலாண்மைகளின் கீழ் செயல்படும் தொடக்க / நடுநிலை / உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து வகை ஆசிரியர்களும் விருதிற்குத் தகுதியுடையவர்கள் ஆவார்கள்.
3. இவ்விருது வகுப்பறையில் கற்பித்தல் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். அலுவலகங்களில் நிர்வாகப் பணி மேற்கொள்ளும் ஆசிரியர்கள் விண்ணப்பிக்கக்கூடாது.
4. கல்வியாண்டில் செப்டம்பர் 30ஆம் தேதிக்கு முன் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற ஆசிரியர்களைப் பரிந்துரை செய்யக்கூடாது. ஆசிரியர்கள் கல்வியாண்டில் குறைந்தது 4 மாதங்கள் (செப்டம்பர் 30ஆம் தேதிவரை –in Regular Service) பணிபுரிந்தவராக இருத்தல் வேண்டும். (மறுநியமன காலத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளக்கூடாது).
5. பரிந்துரைக்கப்படும் ஆசிரியர்கள் எவ்விதக் குற்றச்சாட்டிற்கும், ஒழுங்கு நடவடிக்கைக்கும் உட்படாதவராகவும், பொதுவாழ்வில் தூய்மையானவராகவும், பொது சேவைகளில் நாட்டம் கொண்டவராகவும், பள்ளி மாணவர்களின் இடைநிற்றலைக் குறைத்தல், பள்ளி மாணவர் சேர்க்கை, தேர்வில் தேர்ச்சி சதவீதத்தை உயர்த்துதல், கல்வித்தரத்தில் பின்தங்கிய மாணவர்களின் தரத்தை முன்னேற்ற பாடுபடுபவராகவும் இருத்தல் வேண்டும்.
6. அரசியலில் பங்கு பெற்று அரசியல் கட்சிகளுடன் தொடர்புடைய ஆசிரியர்களின் பெயர்கள் கண்டிப்பாகப் பரிந்துரைக்கப்படக் கூடாது.
7. கல்வியினை வணிக ரீதியாகக் கருதி செயல்படும் ஆசிரியர்களையும், நடத்தை விதிகளுக்கு முரணாக இருக்கும் ஆசிரியர்களையும் இவ்விருதிற்குத் தகுதியற்றவர்களாகக் கருதப்பட வேண்டும்.
8. சிறந்த முறையில் பணிபுரியும் தமிழாசிரியர்கள் மற்றும் சிறப்பு ஆசிரியர்களான ஓவிய ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், கைத்தொழில் ஆசிரியர்கள், இசை ஆசிரியர்கள் மற்றும் மாற்றுத்திறன் ஆசிரியர்களில் தகுதியானவர்களையும் விருதிற்குப் பரிந்துரைக்கும் போது கவனத்தில் கொள்ளவேண்டும்.

9. பரிந்துரைக்கப்படும் ஆசிரியர்களின் கருத்துருக்கள், பெயர் பட்டியலினை மாவட்டத் தேர்வுக்குழுத் தலைவர் தமது சொந்தப் பொறுப்பில் வைத்துக் கொள்ள வேண்டும். தேர்வுக்குழு உறுப்பினர்களும் இது தொடர்பாக மந்தணம் காத்திடல் வேண்டும்.
10. டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதிற்காக வரையறை செய்யப்பட்ட படிவத்தில் மட்டுமே ஆசிரியர்களின் கருத்துருக்கள் அனுப்பப்படல் வேண்டும்.
11. ஆகஸ்டு மாதம் 14ஆம் தேதிக்குள் முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட விருதுகளின் எண்ணிக்கை அடிப்படையில் பட்டியல் தயார் செய்து 1:2 என்ற வீதத்தில் தேர்வு செய்து, நல்லாசிரியர் விருதிற்கான ஆசிரியர்களின் கருத்துருக்களை சாதாரண புத்தக வடிவில் தயாரித்து ஒரு நகல் மட்டும் பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (இடைநிலைக்கல்வி) அவர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
12. வருவாய் மாவட்டத்தில்உள்ளஆசிரியர்களைத் தேர்வு செய்து பரிந்துரை செய்யப்படும் பொழுது, அனைத்து வகை ஆசிரியர்கள் மற்றும் அனைத்துப் பள்ளிகளையும் உள்ளடக்கியதாக உள்ளதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.
13. மாநில அரசால் பரிந்துரைக்கப்பட்டு தேசிய விருது பெற்ற எந்த ஆசிரியரையும் பரிந்துரை செய்தல் கூடாது.

4. 2021-2022ஆம் கல்வியாண்டு முதல் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது வழங்கிட தகுதியான ஆசிரியர்களை தேர்வு செய்திட இவ்வாணையின் இணைப்பில் உள்ள விண்ணப்பப் படிவத்திற்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது. இனிவரும் காலங்களில் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது வழங்குவது தொடர்பாக ஏதேனும் மாற்றங்கள் இருந்தால் அதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள பள்ளிக் கல்வி முதன்மைச் செயலாளருடன் கலந்தாலோசித்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு பள்ளிக் கல்வி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார். மேலே குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் தவறாது கடைப்பிடிக்கப்பட வேண்டும் என அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை-6.
இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்பயிற்சிநிறுவனம், சென்னை-6
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.
மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்குநர், சென்னை-6
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை-6
இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,சென்னை-8

சென்னை மாநகராட்சி ஆணையாளர், சென்னை-8
முதல்வர், கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம், சைதாப்பேட்டை,
சென்னை-15
சிறப்பு ஆணையர் (ம) இயக்குநர்,
மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலம், சென்னை-5
இயக்குநர், சமூக பாதுகாப்புத் துறை, சென்னை-10
பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (இடைநிலை),சென்னை-6.

**நகல்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.
சமூக நலம் மற்றும் மகளிர்உரிமைத்துறை, சென்னை-9.
மாண்புமிகு பள்ளிக்கல்வி அமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை-9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

## டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது
## விண்ணப்பப் படிவம்

| |
|---|
| தற்போது எடுக்கப்பட்ட நிழற்படம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | வருவாய் மாவட்டத்தின் பெயர் | | : | |
| 2 | கல்வி மாவட்டத்தின் பெயர் | | : | |
| 3 | 1 | ஆசிரியர் பெயர் (திரு. / திருமதி. / செல்வி.) | : | |
| | | தமிழ் (முன்னெழுத்து பெயரின் முன்) | : | |
| | | ஆங்கிலம் (Initial before name) | : | |
| | 2 | ஆசிரியரின் பதவி | : | |
| | 3 | பிறந்த தேதி மற்றும் வயது | : | d d m m y y y y வயது |
| | 4 | பணியிலிருந்து ஓய்வு பெறும் நாள் | : | d d m m y y y y |
| | 5 | ஆசிரியராகப் பணியில் சேர்ந்த நாள் | : | |
| | 6 | இனம் | : | ஆண் பெண் |
| | 7 | தந்தை / கணவர் பெயர் | : | |
| 4 | 1 | ஆசிரியர் பணிபுரியும் பள்ளியின் பெயர், முழு முகவரி, அஞ்சல் குறியீட்டு எண்ணுடன் தமிழில் | : | |
| 5 | ஆசிரியரின் கல்வித் தகுதிகள் | | | |
| | 1 | பொதுக்கல்வித்தகுதி | : | |
| | 2 | தொழிற்கல்வித்தகுதி | : | |
| | 3 | பிற தகுதிகள் | : | |
| 6 | கல்விப் பணிக்காலம் (வகுப்பறையில் மாணவர்களுக்குக் கல்வி கற்பித்த நாட்கள் மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்) | | | |

| கல்விப் பணிக்காலத்தில் கல்வி கற்பித்த நாட்களின் பதிவுகள் விவரம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண். | பள்ளியின் பெயர் | பதவி | வகுப்பறையில் கல்வி கற்பித்த நாட்கள் | | மொத்தக் கால அளவு | | |
| | | | முதல் | முடிய | நாள் | மாதம் | ஆண்டு |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| மொத்தப் பணிக்காலம் | | | | | | | |

| | | | |
|---|---|---|---|
| 7 | கடந்த 5 ஆண்டுகளில் ஆசிரியர் கற்பித்த / கற்பிக்கும் வகுப்புகள் விவரம் | : | |
| 8 | கடந்த 5 ஆண்டுகளில் தொடக்க / நடுநிலைப் பள்ளிகள் / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியராக / தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் பள்ளி மாணவர் சேர்க்கைக்காக / இடைநிற்றலைத் தவிர்க்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மற்றும் மாணவர் சேர்க்கை அதிகரித்துள்ள விவரம் | : | |
| 9 | கடந்த 5 ஆண்டுகளில் ஆசிரியர் / தலைமையாசிரியர் பணியாற்றிய போது, 10, 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் பொதுத்தேர்வில் மாணவர்கள் பெற்ற தேர்ச்சி விழுக்காடு ஆண்டுவாரியாகக் குறிப்பிடுதல் வேண்டும் | | |

| கல்வியாண்டு | பாடம் | 10ஆம் வகுப்பு | 11ஆம் வகுப்பு | 12ஆம் வகுப்பு |
|---|---|---|---|---|
| | | தேர்ச்சி % | தேர்ச்சி % | தேர்ச்சி % |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

| | | | |
|---|---|---|---|
| 10 | உடற்கல்வி இயக்குநர் / உடற்கல்வி ஆசிரியர் என்ற நிலையில் மாவட்ட / மண்டல / மாநில / தேசிய / சர்வதேச அளவில் மாணவர்கள் வெற்றி பெற்ற | : | |

| | | | |
|---|---|---|---|
| | சாதனைகள் விவரம் (கடந்த 5 ஆண்டுகளில்) | | |
| 11 | சிறப்பாசிரியர் என்ற நிலையில் அவர் மூலம் சாதனைகள் படைத்த மாணவர்களின் வெற்றி விவரங்கள் (கடந்த 5 ஆண்டுகளில்) | : | |
| 12 | பள்ளியின் கட்டமைப்பு மேம்பாட்டுக்காக / ஆசிரியர் / தலைமையாசிரியர் மேற்கொண்ட தனிப்பட்ட முயற்சிகளின் விவரம்<br><br>(100 வார்த்தைகளுக்கு மிகாமல்) | : | |
| 13 | கடந்த 5 ஆண்டுகளில் ஆசிரியர் வருகை புரிந்த நாட்களின் சதவீதம் | : | |
| 14. | தகவல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி தன்னால் கண்டறியப்பட்ட தொழில்நுட்ப உபகரணங்கள் மூலம் மாணவர்கள் ஊக்கத்துடனும், ஆர்வத்துடனும் கல்வி கற்க நடவடிக்கை மேற்கொண்ட விவரம் மற்றும் அதனால் மாணவர்கள் அடைந்த வெற்றிகள் | : | |
| 15. | ஆசிரியர் பெற்ற பயிற்சிகள் விவரம் | : | |
| 16. | பாடத்திட்டம் மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகள் மூலம் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு ஆசிரியர்கள் ஆற்றிய பங்களிப்பின் விவரம் | : | |
| 17 | சமுதாயத்தின் நன்மதிப்பைப்பெற ஆசிரியர் ஆற்றிய பணிகளின் விவரம் | : | |
| 18 | ஆசிரியர் என்ற நிலையில் மத்திய அரசு / மாநில அரசு / மாவட்ட பொது அமைப்புகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிலிருந்து விருதுகள் ஏதேனும் பெற்றுள்ளாரா? அதன் விவரங்களைக் குறிப்பிடவும். | : | |
| 19 | மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, தேர்தல்பணி மற்றும் பிற அரசு சார்ந்த | : | |

| | | | | |
|---|---|---|---|---|
| | பணிகளில் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு தண்டனை ஏதேனும் ஆசிரியருக்கு வழங்கப்பட்டுள்ளதா? ஆம் எனில் அதன் விவரம். | | | |
| 20 | 1. | அரசு பொதுத் தேர்வுப் பணியில் தலைமையாசிரியர் / ஆசிரியரின் பங்களிப்பு | : | |
| | 2. | தேர்வுப் பணியில் துறையால் தண்டனை பெற்றவரா? ஆம் எனில் அதன் விவரம் | : | |
| 21. | மாவட்டத் தேர்வுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட குறிப்பு விவரம் (Pen picture) பரிந்துரையானது பரிந்துரைக்கப்படும் ஆசிரியரின் சாதனைகள் சார்பான விவரங்கள் சுமார் 25 முதல் 30 வார்த்தைகளுக்குள் அடங்கியதாகவும் இருத்தல் வேண்டும். | | : | |

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்

**சான்று**

.......................... ஆம் ஆண்டிற்கான டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதிற்காக திரு./திருமதி./செல்வி. ........................................................................ அவர்கள் பரிந்துரைக்கப்படுகிறார். இவ்விருதிற்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள ஆசிரியர் / ஆசிரியையின் கல்வி, பணிக்காலத்திற்கான பதிவுகள் சரியாக உள்ளது என்றும், இவ்வாசிரியர் மீது எவ்விதமான சட்டரீதியான குற்றச்சாட்டுகள், விசாரணைகள், நடவடிக்கைகள் எதுவும் துறை ரீதியாகவோ அல்லது வேறு எந்த முறையிலும் குற்றச்சாட்டுகள் ஏதும் நிலுவையில் இல்லை என்ற உறுதிமொழி இதன் மூலம் அளிக்கப்படுகிறது. மேலும், பரிந்துரை செய்யப்பட்டுள்ள ஆசிரியர் / ஆசிரியையின் முழுத்தகுதியின் அடிப்படையிலும், அப்பழுக்கற்றவர் என்ற நிலையிலும், தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று இதன் மூலம் சான்றளிக்கப்படுகிறது.

மாவட்டத் தேர்வுக்குழு உறுப்பினர்கள்
கையொப்பம்

மாவட்டத் தேர்வுக்குழு தலைவரின்
கையொப்பம்

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்